# பூவுலகில் தத்தாத்திரேயர் எடுத்த அவதாரங்கள்

# ஸ்ரீ அக்கல்கோட் ஸ்வாமிகள்

## சாந்திப்பிரியா

(பிப்ரவரி, 2008 ஆம் ஆண்டு ஆன்மீக ஆலயம் இதழில் வெளியான கதையின் மாற்றி அமைக்கப்பட்ட கதை இது )



ந்ருசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகளின் அவதாரத்தின் 250-300 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கல்கோட் ஸமர்த்த ஸ்வாமிகளின் அவதாரம் நிகழ்ந்தது. ஸ்வாமி ஸமர்த்த 15 ஆம் நூற்றாண்டில் அவதரித்ததாகக் கூறுகின்றனர். குரு சரிதாவின் மூலம் நாம் அறிய முடிந்தது என்ன என்றால் 1458 ஆம் ஆண்டில் மகா சமாதியில் அமர்ந்த அவர் 300 ஆண்டுகள் கடும் தவத்தில் இருந்தார். அவர் அப்படித் தவம் இருக்கையில் அவரைச் சுற்றிக் கரையான் புற்று வைத்து விட அவர் தன்னைச் சுற்றிலும் கறையான் புற்று வைத்திருப்பது கூடத் தெரியாமல் அந்தப் புற்றுக்குள் தவம் இருந்தார். அவர் அந்த மண் புற்றுக்குள் இருப்பது வெளியில் மற்றவர்களுக்கும் தெரியாது. ஒருநாள் மரங்களை வெட்டிக்

கொண்டு இருந்த பொழுது ஒரு மரக் கிளை எதேச்சையாக அவர் தவமிருந்த புற்றின் மீது விழுந்து விட அந்தப் புற்று உடைந்த போய் அவர் தவமும் கலைந்தது என்கின்றனர்.

தவம் கலைந்ததும் பல இடங்களுக்கும் செல்லத் துவங்கினார். பண்டார்புரா, ஷோலாபூர் போன்ற இடங்களுக்குச் சென்றார். அவர் தன் வாழ்க்கையில் பல அற்புதங்களை செய்து காட்டி உள்ளார். அவற்றில் சில இவைகள். ராம்பூர் என்ற இடத்தைச் சேர்ந்த ராவாஜி என்பவர் ஸ்வாமிகளின் பக்தர். ஒரு முறை ஸமர்த்த ஸ்வாமிகள் அந்த ஊருக்கு வருகை தந்த பொழுது, தன் வீட்டில் ஸ்வாமிகளை தரிசிக்க 40-50 பக்தர்கள் வரக் கூடும் என நினைத்து ஸ்வாமிகளை கௌரவிக்கும் விதத்தில் ஐம்பது பேர்கள் சாப்பிடக் கூடிய அளவில் சாப்பாடு தயாரித்து வைத்து இருந்தார். ஆனால் ஸ்வாமிகள் அங்கு வரும் செய்தி காட்டுத் தீ போல எங்கும் பரவி பக்கத்து கிராமங்களில் இருந்த மக்கள் எல்லாம் வந்து குமிழ்ந்தனர். ராவாஜி செய்வதறியாது கதி கலங்கி நின்றான். ஆனால் அதைக் கண்ட ஸ்வாமிகள் கவலைப் படாதே, நான் இருக்க பயம் ஏன் என்று கூறிவிட்டு இரண்டு பாத்திரங்களை கொண்டு வரச் சொல்லி விட்டு அதில் கண்டோபா ( சிவன் ) மற்றும் அன்னபூர்ணீ போன்ற தெய்வங்களின் சிறு சிலைகளைப் போட்டு அதன் மீது ரொட்டி போன்றவற்றை வைத்து விட்டார். அதை எடுத்துப் போய் துளசி செடியை மும்முறை சுற்றி பிரதர்ஷணம் செய்த பின் வந்திருந்த மக்களை வரிசையாக நிற்க வைத்து உணவு தருமாறு ராவாஜி தம்பதியினரிடம் கூறினார்.

என்ன அதிசயம் வந்திருந்த ஆயிரக்ககணக்கான பக்தர்கள் அனைவருக்கும் உணவு போடத் துவங்க, அட்சய பாத்திரம் போல அந்த பாத்திரத்தில் இருந்து எடுக்க எடுக்க உணவு வந்தது. 50 பேர்களுக்கு சமைத்த உணவை என ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சாப்பிட்டனர் என்பது அதிசயம் அல்லவா ? 1872 ஆம் ஆண்டு நடந்த சம்பவம் இது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் கும்பமேளா நாசிக்கில் நடந்தது. வாமன்புவா படோகர் என்ற பக்தர் திரயம்பகேஷ்வரில் ஒரு தேவி ஆலையத்திற்கு சென்று பூஜை புனஸ்காரங்கள் செய்தபின் தேவியின் மார்பில் இருந்த வெற்றிலை மாலையைத் தனக்கு தர முடியுமா என்று அர்ச்சகரிடம் கேட்டார். அந்த அர்சகருக்கு வந்து இருப்பவரைத் தெரியும். அவர் ஸமர்த்த ஸ்வாமிகளின் பக்தர் என்பதும் தெரியும். ஆகவே கேலியாக அந்த ஆலைய அர்ச்சகர் கூறினார், முடியுமானால் அந்த ஸமர்த்த ஸ்வாமிகளின் சக்தியால் அதை எடுத்துக் கொள் . அதைக் கேட்ட பக்தரின் மனம் துக்கம் அடைந்தது. ஆனால் ஸமர்த்த ஸ்வாமிகள் தன்னைக் கை விட மாட்டார் என நம்பியன

பக்தி பூர்வமாக அந்த இடத்திலேயே ஸமர்த்த ஸ்வாமியை வேண்டிக் கொள்ளத் துவங்கினார். அந்த புரோகிதர் வெட்கி தலைக் குனியும்படி அந்த வெற்றிலை மாலை பறந்து வந்து அவர் கழுத்தில் விழுந்தது.

மண்பாண்டம் செய்யும் குயவரான பாபா சாஹேப் என்ற பக்தர் ஸ்வாமிகளை தரிசிக்க வந்தான். அவன் அருகில் வந்ததும் குயவா உனக்கு நேரம் வந்து விட்டது என ஸ்வாமிகள் கூற அவன் அதன் உள் அர்த்தத்தைப் புரிந்து கொணடவன் ஸ்வாமிகளுடைய கால்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அழுதபடி உயிர் பிச்சைக் கேட்க, கருணை கொண்ட ஸ்வாமிகளும் ஆகாயத்தை நோக்கி எவருடனோ பேசிய பின் எதிர் பக்கத்தில் ஓடிக் கொண்டு இருந்த மாட்டைக் காட்டி இப்போது அதை எடுத்துக் கொள் எனக் கூற அந்த மாடு அங்கேயே செத்து விழுந்தது. குயவனுக்கு பதில் மாட்டை யமனிடம் அனுப்பி அவனைக் காத்தார். இப்படியாக பல்வேறு அதிசயமான சக்திகளைக் காட்டிய பின் 1878 ஆம் ஆண்டு அவர் மகா சமாதி அடைந்தார்.